1 Million Connections
1 Million Reasons

Do you want to rent a property? YES

**01 - 15 September 2007**

பேட்டி

முதல் பக்கம்
ஆசிரியர் பக்கம்
பேட்டிகள்
விமர்சனம்
தொடர்
சிறப்பு வண்ணப்படம்
துணுக்குகள்
சினிமினி
மும்பை பக்கம்
சாதனையாளர்கள்
புகைப்படத் தொகுப்பு
ஆவணங்கள்

Check Out New Stocks

Ads by Google

Special Deals
World Cup Cricket Videos
NEW 200000 jobs available
NEW Book Cheap Flights and Hotels
Hottest Indian Celeb Wallpapers




## பூமிப் பந்தை புரட்டிய போட்டிருக்கும் தமிழ் சினிமா

75-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது தமிழ் சினிமா. இது நமக்கெல்லாம் பெருமிதம் அளிக்கின்ற அம்சம். இந்த முக்கால் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தையும், மதிப்பிடத்தக்க வளர்ச்சியையும் நமது தமிழ் சினிமா பதிவு செய்திருக்கிறது.

இதை நிறுவ ஏராளமான உதாரணங்களை மகிழ்வோடும், பெருமையோடும் முன் வைக்கலாம். வரலாற்று நாயகர்களையும், நாயகிகளையும், ஒட்டுமொத்த இந்தியாவையும் ஆட்டிப் படைக்கும் தொழில்நுட்பக் கலைஞர்களையும் ஒரு சேர உருவாக்கித் தந்துள்ளது தமிழ் சினிமா.

அது மட்டுமின்றி தனது மாநிலத்திற்கான நான்கு முதல்வர்களைத் தந்த உலகின் ஒரே திரையுலகம் என்ற பெருமையையும், உலக சினிமா வரலாற்றுக் குறிப்பேட்டில் தனித்துவமிக்கப் பக்கத்தில் தமிழ் சினிமா பொறித்திருக்கிறது.

தமிழ் சினிமா அந்தளவுக்குத் தமிழ் சமூகத்தின் நாடி, நரம்புகளோடும், ஊன், உள்ளம், உதிரத்தோடும் உறவாடிக் கொண்டிருக்கிறது. அதன் சமீபத்திய விஸ்வரூப வளர்ச்சியையும், எல்லைகள் கடந்து ஜொலிக்கும் பெருமையையும், ஒவ்வொரு தமிழனும் நினைத்துப் பெருமைப்படும் வகையில் விரிவாக அலசுகிறது இந்தக் கட்டுரை.

ஒரு முக்கியக் குறிப்பு... இந்தக் கட்டுரை, எம்.கே.தியாகராஜ பாகவதரின் காலத்திலிருந்து ஆரம்பித்து படிப்படியாக ஏற்பட்ட வளர்ச்சியை வியப்பதல்ல! மாறாக ‘சிவாஜி’யுடன் ஆரம்பித்து ‘அதிருகிற’ ரகம்! எல்லாமே லேட்டஸ்ட்!




இமயங்கள் இணைந்த 'சிவாஜி' திரைப்படம் தான் இன்று தமிழ் சினிமாவை குன்றின் மேல் வைத்த ஒளி விளக்காய் புகழ் சிகரத்தில் ஏற்றியிருக்கிறது. 'சிவாஜி' தொடங்கப்பட்ட நாளிலிருந்து, படத்தைப் பற்றிய எல்லையற்ற எதிர்பார்ப்புகள் இந்திய தேசத்தின் எல்லைகள் வரை எதிரொலித்தன.

**அட்டகாச 'சிவாஜி'**

90 கோடிகளில், சர்வதேசத் தரம் வாய்ந்த கலைஞர்களின் 2 வருட கடினமானக் களப் பணியில் உருவான 'சிவாஜி', இந்திய சினிமா வரலாற்றிலேயே இல்லாத அதிசயமாக, எடுத்த எடுப்பிலேயே 800 பிரிண்டுகள் போடப்பட்டு, சுமார் 70 கோடிகளுக்கு விலை போனது. வெளிநாடுகளுக்கு மட்டும் 151 பிரிண்டுகள் அனுப்பப்பட்டது இன்னொரு சாதனை.



தமிழகத்தில் 200-க்கும் மேற்பட்ட தியேட்டர்களிலும், அதைவிட அதிகமாக ஆந்திராவில் 250 தியேட்டர்களிலும் (டப் செய்யப்பட்டு) திரையிடப்பட்டது 'சிவாஜி'.

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகளில், ஹாலிவுட் படங்களுக்கு அடுத்து, பாலிவுட் படங்கள்தான் அதிகம் ரசிக்கப்படும்.

ஆனால், அதே பாலிவுட்டைத் தன் தயாரிப்புச் செலவிலும், வியாபாரத்திலும் அநாயசமாக மிஞ்சி சாதனை படைத்த கோலிவுட் 'சிவாஜி' அமெரிக்காவிலும், கனடாவிலும், தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் 40-க்கும் மேற்பட்ட தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது.

அதுமட்டுமில்லை, 'சிவாஜி'க்கு கிடைத்த வரவேற்பைக் கண்ட 'லாஸ் ஏஞ்சலிஸ் டைம்ஸ்' எனும் அமெரிக்க நாளிதழ் படத்தைப் பற்றி முழுக் கட்டுரை வெளியிட்டுள்ளது. மேலும் இந்தியாவில் பாலிவுட் மட்டுமின்றி, தெற்கில் கோலிவுட் எனும் திரையுலகம் இருப்பதையும், தமிழ் என்ற மொழி 7 கோடி மக்களால் பேசப்படுவதையும் அக்கட்டுரையில்




குறிப்பிட்டுள்ளது அந்நாளிதழ்.

அமெரிக்காவில் இப்படியென்றால், பிரிட்டனிலோ தமிழ்ப் படங்கள் பொதுவாகத் திரையிடப்படாதாம். அப்படியே திரையிடப்பட்டாலும், ஒன்றிரண்டு தியேட்டர்களில் மூன்று நாட்களுக்கு மேல் ஓடாதாம். ஆனால், ‘சிவாஜி’ சிங்கம் பிரிட்டனையும் விட்டு வைக்காமல், 20 தியேட்டர்களில் திரையிடப்பட்டு, 15க்கும் மேற்பட்ட தியேட்டர்களில் நான்கு வாரங்களைக் கடந்து ஓடிக் கொண்டிருக்கிறது.

அந்நாட்டின் பிரசித்தி பெற்ற பி.பி.சி. நிறுவனம் எடுக்கும், உலகப் புகழ்பெற்ற யு. கே டாப்-டென்னில், இதுவரை எந்தத் தமிழ் படமும் நுழைந்ததில்லை. ஆனால் ‘சிவாஜி’ அதில் எடுத்த எடுப்பிலேயே 7வது இடத்தைப் பிடித்து விட்டாரென்றால் நம்மால் நம்ப முடிகிறதா? ஆனால்... அதுதான் உண்மை.

மலேசியாவில் மட்டும் 60 தியேட்டர்களில் ரிலீஸ். ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா என்று பல நாடுகளிலும் அட்டகாசம் செய்துவரும் ‘சிவாஜி’ அடுத்து ரஷ்யாவிலும், ஜப்பானிலும் வெளியாகிறது. ஜப்பான் ரஜினியின் கோட்டை. அங்கே ‘சிவாஜி’யின் கொடி நிச்சயம் பறக்கும்.

ஆனால், ரஷ்யர்களுக்கோ இந்தியா என்றால் பாலிவுட்டைத்தான் தெரியும். பாலிவுட்டின் ‘நடிகர் திலகம்’ ராஜ்கபூருக்கு ரஷ்யாவில் ஏராளமான ரசிகர்கள் உண்டு. அவரது படங்கள் அங்கு ‘ஒஹோ’வென்று ஓடிய காலங்கள் உண்டு.

அதே ரஷ்யர்கள், அதே இந்தியாவில் பாலிவுட்டுக்கு இணையாக இன்னொரு பிரமாண்டமானத் திரையுலகமும் செயல்படுகிறது என்பதையறிந்து ஆச்சரியப்பட்டார்கள். விளைவு, சமீபத்தில் தான் ரஷ்ய அரசுக்கும், நம் ஃபிலிம் சேம்பருக்கும் இடையில் தமிழ்ப் படங்களை ரஷ்யாவில் வெளியிடுவது குறித்து ஒப்பந்தம் ஒன்று போடப்பட்டது.

‘நடிகர் திலகம்’ சிவாஜியின் ‘தில்லானா மோகனாம்பாள்’ தமிழ்ப் படத்தை மட்டுமே இதுவரை பார்த்துள்ள ரஷ்யர்களின் தேசத்துக்கு செல்லும் சிவாஜி, அவர்களுடனான ஒப்பந்தத்துக்கு உரையெழுதி, அங்கும் தமிழ் சினிமாவுக்கு ஒரு வியாபாரக் கிளையைத் திறந்துவிட்டு வருவார் என்று நம்பலாம்.

‘அமிதாப்பை விட, ரஜினி தான் அதிக செல்வாக்குடையவர்’ என்பதை உலகுக்கு உணர்த்தியது ஓர் கருத்துக் கணிப்பு.

அதில் ரஜினிக்கு அதிக வாக்குகள் விழுந்தது, தென்னிந்தியாவில் கூட இல்லை. 'பிக்-பி' என பாலிவுட்காரர்களால், ஒருவித மரியாதையோடு அழைக்கப்படும் அமிதாப், 'ஜாம்பவானாக' இருக்கும் வட இந்தியாவில்தான்.

ரஜினி ஏற்கனவே பாலிவுட்டில் எல்லோருக்கும் அறிமுகமானவர்தான். 'அந்தாகானூன்' உட்பட பல ஹிந்திப் படங்களில் நடித்தவர். மேலும், ரஜினி நடித்து வெற்றி பெற்ற 'பில்லா', 'தீ', 'போக்கிரிராஜா', 'மாவீரன்' உள்ளிட்டப் பல படங்கள் ஹிந்தியில் அமிதாப் நடித்து வெற்றி பெற்றவை. ஆனால், இன்று நிலைமை தலைகீழாகிவிட்டது.

ரஜினி நடித்த சாதனைப் படமான 'சந்திரமுகி'யின் ஹிந்தி ரீமேக்கில் நடித்து வருகிறார் அமிதாப். 'ரஜினி இந்தியாவுக்கே சூப்பர் ஸ்டார் ஆயிட்டார்லே' என்று ஒரு பேட்டியில் மகிழ்வோடு வரவேற்றிருக்கிறார் ஆமிர்கான்.

## சூப்பர் ஸ்டாரின் 'சூப்பர்' பாய்ச்சல்

ரஜினியைப் பொறுத்தவரை இந்திய சினிமா, புருவத்தைச் சுருக்கி அவரைத் திரும்பிப் பார்த்தது, 'முத்து' திரைப்படம் ஜப்பானில் 'டான்சிங் மகாராஜா' என்ற பெயரில் ஒரு வருடத்திற்கும் மேல் ஓடி வசூலைக் குவித்தபோதுதான்.

அங்கே அவருக்கு ரசிகர் மன்றங்கள் முளைத்ததும், ஜப்பானியர்கள் ரஜினியை மகாராஜாவாகக் கொண்டாடுவதையும் கண்டு மூக்கின் மேல் விரல் வைத்தது ஒட்டுமொத்த இந்தியாவும். அன்று இந்தியாவைத் திரும்பிப் பார்க்க வைத்த ரஜினி, இன்று 'சந்திரமுகி', 'சிவாஜி' படங்களின் மூலம் உலகையே தன் பக்கம் ஈர்த்துள்ளார்.

மயக்கும் தொழில் நுட்பத்தால் ஹாலிவுட் படங்களும், நட்சத்திரங்களின் ஜொலிஜொலிப்பால் பாலிவுட் படங்களும் வசூலைக் குவிக்கின்றன. ஆனால், ஒருசாண் முகத்துக்காக கோடிக்கணக்கானோர் தியேட்டர்களில் திரள்வதும், கோடிகள் குவிவதும் ரஜினி என்ற மந்திர சொல்லுக்கு மட்டும்தான் என்றால் அது மிகையில்லை.

## எல்லா'வுட்'டும் இனி கோலிவுட்டுக்குள்...

உலக சினிமாவிற்கு இந்திய சினிமா என்றால் அதற்கு அர்த்தம் 'ஹிந்தி சினிமா'. ஹிந்தி சினிமாவுக்கோ, தென்னிந்திய சினிமா என்றால் அதற்கு அர்த்தம் 'தமிழ் சினிமா'. பாலிவுட்டின் அந்த நம்பிக்கையை மீண்டும்

பலப்படுத்தியிருக்கிறது கோலிவுட்.

ஆம்...தெலுங்கு, கன்னடம், தமிழ் மற்றும் மலையாளம் ஆகிய நான்கு மாநில ரசிகர்களுக்கான ஜனரஞ்சக சினிமாக்கள் கோலிவுட்டிலிருந்தே தயாராகின்றன.

நம்மைவிட அதிக மக்கள் தொகை, அதீத சினிமா பற்று, அளவுக்கதிகமானத் தியேட்டர்கள், பசையுள்ள தயாரிப்பாளர்கள், கை நிறைய சம்பளம் பெறும் கலைஞர்கள் என்று பல கூட்டல் குறிகளைக் கொண்டது தெலுங்கு சினிமா.

ஆனால், இன்று தெலுங்கு ரசிகர்களுக்கானத் திரை விருந்து ஹைதராபாத்தில் அல்லாமல், சென்னையில்தான் தயாராகிறது. கடந்த வருடம் தான் அதற்கானப் பிள்ளையார் சுழி போடப்பட்டது.

வெட்டுக்குத்து, வன்முறைகள், தடித்த வார்த்தைகள், ஓவர் ஹீரோயிஸம் போன்ற அம்சங்கள் நிறைந்த தெலுங்கு படங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன ரசிகர்கள் சிரஞ்சீவி, வெங்கடேஷ், ஜூனியர் என்.டி.ஆர், பவன் கல்யாண் போன்ற முன்னணி நடிகர்களின் படங்களையே தோல்வியுறச் செய்தனர்.

அதே நேரத்தில், தமிழ்க் கலைஞர்களான பிரபுதேவா இயக்கிய 'நூவொஸ்தானன்டே... நேனு ஒத்தன்டானா' என்ற படமும், ராகவேந்திர லாரன்ஸ் இயக்கிய 'மாஸ்' என்ற படமும் மாபெரும் வெற்றி பெற்றன.

மேலும், ஏ.ஆர். முருகதாசின் 'ரமணா' தெலுங்கில் சிரஞ்சீவியின் நடிப்பில் 'தாகூர்' என்ற பெயரில் வெளியாகி வசூல் சாதனை படைத்தது.



இதனால் தமிழ் இயக்குனர்களுக்கு அங்கே வெற்றிலை, பாக்கு வைக்காத குறையாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அது மட்டுமல்ல... 'சந்திரமுகி', 'அந்நியன்', 'கஜினி', 'காதல்', 'சண்டக்கோழி' முதலிய தமிழ் படங்கள் தெலுங்கில் 'டப்'பாகி

மாபெரும் வெற்றி பெற்றன.



எந்தளவுக்கு என்றால், 'அந்நியன்' படத்தில் இடம் பெற்ற விக்ரமின் கேரக்டர் பெயரான 'ரெமோ', ஆந்திர அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பிரிவுக்குப் பெயராக சூட்டப்பட்டது.

சூர்யா, 'கஜினி'யின் மூலம் சுமார் 60 சதவீத ஆந்திர கல்லூரிப் பெண்களின் கனவு நாயகனானார். விஷால் தெலுங்கு தேசத்தில் பெரிய மாஸ் ஹீரோவாக விஸ்வரூபமெடுத்தார். அவரது 'திமிரு' படம் 'பொகரு' என்ற பெயரில் 110 தியேட்டர்களில் வெளியிடப்பட்டு வெற்றி பெற்றது.

தெலுங்கு முன்னணி நாயகர்களின் படங்களோ, தமிழ் படங்களோடு போட்டியிட முடியாமல் தோல்வியுற்றன. விளைவு, தமிழ் மொழிப் படங்களை டப் செய்து வெளியிடத் தடை விதிக்க வேண்டும் என்று குரல்கள் எழும்பின.

ஆனால், தமிழ்ப் படங்களால் லாபம் பார்த்த விநியோகஸ்தர்களின் குரல்கள் அதைவிட உச்ச ஸ்தாயியில் ஒலிக்க, எதிர்ப்புக் குரல்கள் அடங்கின.

ஒரு காலத்தில் தெலுங்கு டப்பிங் படங்கள் தமிழகத்தின் மூலை, முடுக்கெல்லாம் முற்றுகையிட்ட நிலை மாறி இன்று மகேஷ் பாபுவின் படங்களைத் தவிர, வேறு எந்த தெலுங்கு நடிகரின் 'டப்பிங்' குரலும் தமிழ் 'டப்பிங்' பேசுவதில்லை.

ஆனால் ரஜினியில் ஆரம்பித்து பரத் வரை நம் நடிகர்களின் படங்கள் ஆந்திர பூமியில் அந்தர் பண்ணி 'தூள்' கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

## 'கேரளத்தின்ட பையன்' ஆன விஜய்

கேரளாவைப் பொருத்தவரை தமிழ்ப் படங்களுக்கு எப்போதுமே மவுசுதான். அங்கே, மலையாளத்தில் 'டப்' செய்து வெளியிட வேண்டிய அவசியமே இல்லை.

சமீபத்திய சாதனை, விஜய்யின் ‘போக்கிரி’ கேரளாவில் ஆடிய ‘வெற்றி தாண்டவம்’. ரஜினி, கமலுக்கும் அங்கே ஏக மவுசுதான் என்றாலும், விஜய்க்கு அங்கே அதைவிட ஸ்பெஷல் எஃபெக்டைக் கொடுக்கின்றனர்.



ஏற்கெனவே, விஜய்யின் ‘துள்ளாத மனமும் துள்ளும்’ அங்கே 150 நாட்கள் ஓடி வெற்றிபெற்றது. அதன்பின், இங்கே வெற்றி பெறும் அவரின் படங்கள் அங்கேயும் வெற்றி பெற்றன.

அதன் தொடர்ச்சியாக கேரளாவில் 6 தியேட்டர்களில் வெளியான ‘போக்கிரி’ 50 நாட்களைக் கடந்தும் வசூலைக் குவித்த வண்ணமிருந்தது.

அப்போது தங்கள் படங்கள் ரிலீஸாகத் தியேட்டர்கள் தேவைப்பட, ‘போக்கிரி’யை எடுக்க சொல்லினர் கேரள சூப்பர் ஸ்டார்களான மம்முட்டியும், மோகன்லாலும். ஆனால், விநியோகஸ்தர்களும், தியேட்டர்காரர்களும் இதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்க ‘கேலிவுட்’டில் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், எல்லா எதிர்ப்புகளையும் மீறி ‘போக்கிரி’ அங்கே 100 நாட்கள் ஓடிவிட்டது.

இதன் மூலம், விஜய்க்கு ஏகப்பட்ட ரசிகர் மன்றங்கள் முளைத்து அதன் சார்பாக விழாக்கள் கொண்டாடப்பட்டன. விஜய் கேரளாவிற்கு வரவழைக்கப்பட்டு ரசிகர்கள் முன்னிலையில் கௌரவிக்கப்பட்டார். ‘ஏஷியாநெட்டில்’ விஜய்யின் பேட்டி நம் தமிழ் மொழியிலேயே ஒளிபரப்பானது.

தமிழில் பிடித்த நடிகர் யார் என்று கேட்டால், கேரள மக்கள் உடனே விஜய் என்று சொல்வதோடு, ‘கேரளத்தின்ட பையன்’

(கேரளத்தின் மகன்) என்றும் உரிமை கொண்டாடுகின்றனர். 'இளையதளபதி' இப்படி கலக்கினாரென்றால் சூப்பர் ஸ்டாரின் 'சிவாஜி' ஒன்றே முக்கால் கோடிக்கு, கேரள விநியோக உரிமைக்காக விற்கப்பட்டுள்ளது.

தமிழ் சினிமாவை ஹிந்தி டப்பிங் படங்களும், பாடல்களும் ஆட்டிப் படைத்த காலமெல்லாம் அப்பொழுதே மலையேறிவிட்டது. தற்போது தமிழ் சினிமா கலைஞர்கள்தான் பாலிவுட்டை ஆட்டிப்படைத்து வருகின்றனர்.

மணிரத்னமும், ஏ.ஆர். ரஹ்மானும் எப்போதுமே பாலிவுட்டை 'முடிசூடா மன்னர்'களாக ஆண்டு கொண்டிருப்பவர்கள். இப்போது புதிதாக ஒரு படையும் பாலிவுட் கோட்டையை முற்றுகையிட்டுள்ளது.

பாலிவுட்டைப் பொறுத்தவரை, 'பிக்-பி' எனப்படும் அமிதாப்தான் சூப்பர் ஸ்டார். 'பாலிவுட் பாஷா' எனக் கொண்டாடப்படும் ஷாருக்கான் அதன் இளைய தளபதி. எத்தனை ஃப்ளாப் கொடுத்தாலும், பிரச்சனைகளில் சிக்கினாலும் சல்மான் எப்போதும் 'தல' போல தனிப்பட்டக் குணாதிசயங்களால் கொண்டாடப்படுபவர்.

'லகான்', 'ரங் தே பஸந்தி' என்று சரித்திரம் படைத்த ஆமிர்கான்தான் பாலிவுட்டின் 'உலக நாயகன்'. இந்த நான்கு பேரும் ஒருசேர தற்போது நம் தமிழ் இயக்குனர்கள் கையில். சமீபத்தில்தான் அமிதாப்பை வைத்து 'சீனிகம்' என்ற சூப்பர் ஹிட்டைக் கொடுத்திருக்கிறது தமிழ் இயக்குனர் பாலகிருஷ்ணனுடன், இளையராஜா, பி.சி. ஸ்ரீராம் கூட்டணி.

'மௌன ராகம்' படத்தின் 'மன்றம் வந்த தென்றலுக்கு' பாடல் இப்படத்தில் இடம்பெற்று செம ஹிட்டாகி இப்போது ஹிந்திக்காரர்களையும் தழுவிக் கொண்டிருக்கிறது.

ஹிட் என்பதையும் மீறி, ஒரு வயதான ஆணுக்கும், இளம் பெண்ணுக்கும் இடையேயான மெல்லிய அன்பை இனிக்க இனிக்க சொன்னதில் ஒட்டுமொத்த பாலிவுட்டே இந்த மூவர் கூட்டணியை மரியாதையோடு பார்க்கிறது.

ரீ-மேக் படங்களை விரும்பாத ஆமிர்கான், 'கஜினி' தமிழ் பதிப்பைப் பார்த்து மிரண்டுபோய் அதனை 'கஜ்ரி' என்ற பெயரில் நடித்து வருகிறார். இயக்குனர் அதே ஏ. ஆர். முருகதாஸ்.

இசை நம்மூர் ஏ.ஆர். ரஹ்மான். ஏற்கெனவே ஆமிர்கானும் ரஹ்மானும், 'லகான்' மற்றும் 'ரங் தே பஸந்தி' மூலம்

சர்வதேச அங்கீகாரம் பெற்றவர்கள். தற்போது இந்த இருவருடன் இணைவதால் முருகதாஸும் சர்வதேச அங்கீகாரம் பெறுவார் என்று நம்பலாம்.

பாலிவுட்டின் வசூல் சக்ரவர்த்தியான ஷாருக்கானின் அடுத்தப் படமான 'லஜ்ஜாவை' இயக்குபவர் மணிரத்னம். மணிரத்னத்தைப் பற்றி சொல்லவே தேவையில்லை. 'மணி ஸார்' கூப்பிட்டால் எந்தப் படத்தையும் உதறிவிட்டு வர பாலிவுட்காரர்கள் ரெடி.
இன்னொரு 'கானான' சல்மானை இயக்குபவர் பிரபுதேவா.

தமிழில் 'போக்கிரி'யை இயக்கி வெற்றிபெற்ற பிரபுதேவா அதனை ஹிந்தியிலும் இயக்குகிறார். தயாரிப்பு ஸ்ரீதேவி போனிகபூர்.

சிவாஜியின் மூலம் சரித்திரம் படைத்த ஷங்கரும் தனது கனவுப் படமான 'ரோபோ'வை சமீபத்தில் 'க்ரிஷ்' படத்திற்காக சிறந்த நடிகருக்கான கேன்ஸ் விருதைப் பெற்ற ஹ்ரித்திக் ரோஷனை வைத்து இயக்கப் பேச்சுவார்த்தை நடத்தி வர, செல்வராகவனோ தனது செவன் ஜி ரெயின்போ காலனியை விவேக் ஓபராயை வைத்து ரீமேக் செய்கிறார்.

இன்னொரு பக்கம் 'இயக்குனர் இமயம்' பாரதிராஜா 'பாலிவுட் பிரகாஷ்ராஜ்' நானா படேகரை வைத்து இயக்கிய 'சினிமா' (தமிழில் 'பொம்மலாட்டம்') விரைவில் வெளிவர விருக்கிறது. படத்தின் டபுள் பாஸிட்டிவ்வைப் பார்த்து மிரண்டு போய்விட்டதாகச் சான்றிதழ் அளித்திருக்கிறார்

**படையெடுக்கும் 'பாலிவுட்' கம்பெனிகள்:**

இயக்குனர் சிகரம் கே. பாலச்சந்தர்.

பாலிவுட்டுக்கு இணையாக கோலிவுட் செய்யும் வியாபாரத்தைப் பார்த்து நம் பக்கம் படையெடுத்து வருகின்றன பாரம்பரியம் மிக்க பாலிவுட் படக் கம்பெனிகள்.

ரிலையன்ஸின் படத்தயாரிப்பு நிறுவனமான 'ஆட்லேப்ஸ்' தொடர்ச்சியாகத் தமிழில் படத்தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. அஜித்தின் 'கிரீடம்' படத்தை வெளியிட்டு வெற்றிபெற்ற அந்நிறுவனம், தொடர்ந்து அஜித்தை வைத்து நான்கு படங்களை எடுக்க ஒப்பந்தம் போட்டுள்ளது.

இன்னொரு நிறுவனமான சாய்மீரா, தமிழ்நாடு முழுக்க நஷ்டத்தில் இயங்கிய நூற்றுக் கணக்கானத் திரையரங்குகளை குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறது. மேலும்

பிரகாஷ்ராஜின் 'டூயட் மூவிஸுடன் இணைந்து தரமானப் படங்களைத் தயாரிக்கவும் முற்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் வருகையால், பொருளாதாரப் பிரச்சினையால் முடங்கிப் போயிருந்த பல படங்கள் புத்துயிர் பெற்றுள்ளன. ஒன்றரை ஆண்டுகளாகத் தயாரிப்பில் இருந்த ஏ.எம். ரத்னத்தின் 'பீமா' படத்தை 'ஆட்லேப்ஸ்' நிறுவனம் வாங்கியுள்ளது. அதனால் விரைவில் திரையைத் தொடவுள்ளது 'பீமா'.

**'தேடி வரும் விருதுகள்'**

இவை மட்டுமின்றி 'பாபா ஃபிலிம்ஸ்', 'ஸ்ரீ அஷ்ட விநாயக் சினி விஷன்' போன்ற பாலிவுட் படத்தயாரிப்பு நிறுவனங்களும் தமிழ்ப் பட நிறுவனங்களோடு படத்தயாரிப்பில் கைக் கோர்த்துள்ளது தயாரிப்பாளர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளது.



சமீபத்தில் பிரான்சில் நடந்த 'கேன்ஸ்' திரைப்பட விழாவில் பிரகாஷ்ராஜின் 'மொழி' படம் திரையிடப்பட்டது. படம் முடிந்ததும் அந்த அரங்கிலிருந்த உலக சினிமா ஜாம்பவான்கள் எழுந்து நின்று கைத்தட்டியதோடு படத்தின் பின்னணி இசையையும், திரைக்கதையையும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

ஷங்கர் தயாரிப்பில் வெற்றிபெற்ற 'வெயில்' படத்தைப் பார்த்த விருதுக் குழு, ''வாழ்க்கையில் தோல்விகளையும், துரதிருஷ்டங்களையும் மட்டுமே சந்திக்கும் ஒரு மனிதனின் உணர்வுகளைக் கூட படமாக்க முடியுமா?'' என்று வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

ஏற்கெனவே தனது 'ராம்' படத்தில் கதாநாயகன் ஜீவாவுக்கு சிறந்த நடிகருக்கான வெளிநாட்டு விருதைப் பெற்றுத் தந்த இயக்குனர் அமிரீன் 'பருத்திவீரன்' சமீபத்தில் ஆசிய மற்றும் அரேபிய நாட்டு விருதுகளை வென்றுள்ளது. அது இன்னும் பல சர்வதேச விருதுகளைக் குவிக்கும் என்று இப்போதே பரபரப்பாகப் பேசப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் தமிழ் சினிமாவின் தலைமகனான நடிகர் திலகத்திற்கு லண்டனில் உள்ள உலகப்

புகழ் பெற்ற மியூஸியத்தில் மெழுகு உருவ பொம்மை வைக்கப்படுகிறது.

உலகப்புகழ் பெற்றவர்களை அப்படியே அச்சு அசலாக வார்த்து இங்கே மெழுகுச்சிலையாக வைப்பார்கள். இந்தியாவில் அமிதாப், ஐஸ்வர்யாராய் ஆகியோருக்கு கிடைத்த இந்த கவுரவம் தமிழ் நடிகர் ஒருவருக்கு கிடைப்பது இதுவே முதல் முறை.

**பந்து 'கமல்' கையில்:**

தன் சினிமா வாழ்வு தொடங்கிய காலத்திலிருந்தே தமிழ் சினிமாவை, உலகளாவிய பார்வைக்குக் கொண்டு செல்ல, அல்லும், பகலும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துப் போராடி வருபவர் 'உலகநாயகன்' கமல்ஹாசன்.

தற்போது அவர் பத்து கெட்-அப்களில் நடிக்கும் 'தசாவதாரம்' சிவாஜிக்கு ஈடாக கிட்டத்தட்ட 70 கோடிகளில் செதுக்கப்பட்டு வருகிறது. 'சிவாஜி' தமிழ்ப் படங்களுக்கான உலகளாவிய வாணிபக் கதவுகளைத் திறந்து விட்டிருப்பதால் மிகவும் நம்பிக்கையோடு இருக்கிறது 'தசாவதாரம்' யூனிட்.

உலகமெங்கும் வெளியாகவிருக்கும் 'தசாவதாரம்' வெற்றிபெறும் பட்சத்தில், 'சிவாஜி'யால் தமிழ் சினிமாவுக்கு ஏற்பட்டுள்ள 'சுக்ரதிசை' தொடரும்... அல்லது நாளடைவில் அது தமிழ் சினிமா வரலாற்றுப் புத்தகத்தில் மட்டுமே இடம்பெறும்.



இதோ... நான்கு முறை தேசிய விருது பெற்ற மலையாள முன்னணி இயக்குனர் ஜெயராஜ் தமிழ் சினிமாவின் வளர்ச்சி பற்றி இப்படிக் கூறுகிறார்...

''வெளிப்படையாகவே சொல்றேன்... இப்ப எங்களுக்குத் தொழில் சாமார்த்தியமும், நுணுக்கங்களும் கற்றுத் தருவதே தமிழ் சினிமாதான். எங்கள் ஊரில் எங்கள் படங்களைவிட, தமிழ்ப் படங்களைத்தான் அதிகம் ரசிக்கிறார்கள். எல்லா

மாற்றங்களுமே தமிழ்லதான் தொடங்குது. கதை சொல்லும் விதம், இசை, தொழில்நுட்பம் எல்லாமே தமிழில் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

பாலாஜி சக்திவேல், வசந்தபாலன், அமீர்னு தமிழ்த் திரையுலகில் புதுரத்தம் ஊறிக்கிட்டே இருக்கு. மணிரத்னம் ஹிந்தி சினிமாவை ஆட்டிப் படைக்கிறார். இந்தியாவின் மிக பிரமாண்டப் படமான ‘சிவாஜி’ தமிழர்களால்தான் எடுக்கப்பட்டது. ரஜினி அமிதாப்பைவிட பெரிதாக விஸ்வரூபம் எடுத்திருக்கிறார்.

கமல், பிரகாஷ்ராஜ், பசுபதி போன்ற படு இயல்பான நடிகர்களைத் தமிழில்தான் பார்க்க முடிகிறது. நாங்க எடுக்கிற படங்கள் தமிழ்ப் படங்கள் மாதிரியே அமைகிற சூழ்நிலை வந்தாச்சு. எங்ககிட்ட இருந்த யதார்த்தத்தை கொஞ்சம் கொஞ்சமாக நாங்க இழந்துட்டு வர்றோம்.

நாங்க தமிழ் சினிமாவை அடியொற்றி நடக்க வேண்டிய காலம் வந்திருக்கு என்பதை மனசாட்சியோடு ஒப்புக்கறேன். இதை வெட்கத்தோடு இல்லை... பெருமையோடே சொல்லிக்கறேன்...’’
ஆம்... பெருமைப்படுவோம்.

ஒரு பிறமொழிக் கலைஞன் நம்மை நினைத்துப் பெருமைப்படும்போது, நாமும் பெருமைப்படுவோம் நம்மை நினைத்து... ஏனெனில் தமிழ் சினிமா இனி நமக்கான சினிமா மட்டுமில்லை, உலகிற்கான சினிமாவும் கூட.

— உளுத்தூர். வி.ஜெ. கமல்ராஜ்

மேலும்...






This site is managed by Express Network Private Ltd.
No part of this site should be used in any other media without prior permission.
e-mail: info@cinemaexpress.com